# <u>பெருநகர சென்னை மாநகராட்சி</u>

## <u>மண்டலம் -2</u>

மண்டலம்-2, பகுதி -5, கோட்டம் -20 மணலி காமராஜர் சாலை பகுதியில் கட்டப்பட்டுள்ள நவீன மாட்டுக் கொட்டகையை (11 மாதம்) பராமரித்தல் மற்றும் நிர்வகிப்பதற்கான விண்ணப்பம்.

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி</u>**

**<u>மண்டலம்-2</u>**

**<u>விளம்பர அறிவிப்பு</u>**

மண்டலம்-**2**, பகுதி 5 கோட்டம் 20 , மணலி , காமராஜர் சாலை பகுதியில் புதிதாக நிறுவப்பட்டுள்ள நவீன மாட்டுக் கொட்டகையை பராமரிப்பு மற்றும் நிர்வகித்தல் பணிக்கு கால்நடை வளர்ப்போர் சங்கங்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது. விண்ணப்ப படிவங்களை ***www.chennaicorporation.gov.in*** என்ற வலைதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்

மேலும் பூர்த்தி செய்த விண்ணப்த்தினை ***zone2manali@gmail.com*** மின்னஞ்சல் முகவரிக்கு 20.02.2026 க்குள் அனுப்பவேண்டும். மின்னஞ்சல் மூலம் பெறப்பட்ட விண்ணப்பங்கள் 27.02.2026 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு கூராய்வு செய்யப்பட்டு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**உதவி ஆணையர்-2,**

**மண்டலம்-2.மணலி**

# <u>பெருநகர சென்னை மாநகராட்சி</u>

## <u>மண்டலம் -2</u>

மண்டலம்-**2**, பகுதி 5 கோட்டம் 20 , மணலி , காமராஜர் சாலை பகுதியில் கட்டப்பட்டுள்ள நவீன மாட்டுக் கொட்டகையை (11 மாதம்) பராமரித்தல் மற்றும் நிர்வகிப்பதற்கான விண்ணப்பம்

| | | |
|---|---|---|
| 1 | கால்நடை வளர்ப்போர் சங்கத்தின் பெயர் | |
| 2 | சங்கத்தின் பதிவு எண் | |
| 3 | முகவரி | |
| 4 | தொலைபேசி எண் | |
| 5 | மின்னஞ்சல் முகவரி | |
| 6 | தலைவர்/ செயலாளர் பெயர் | |
| 7 | ஆதார் எண் ( Aadhar No) | |
| 8 | பான் கார்டு எண் (Pan Card) | |
| 9 | மண்டலம் 2 பகுதிக்குட்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை (அனைத்து உறுப்பினர்களின் பெயர், முகவரி உள்ளிட்ட அனைத்து விவரங்களும் தனியாக இணைக்கப்பட வேண்டும்) | |
| 10 | மண்டலம் -2 க்கு உட்பட்ட பகுதியில் உள்ள உறுப்பினர்கள் பராமரிக்கும் மொத்த மாட்டின் எண்ணிக்கை (ஒவ்வொரு உறுப்பினரும் பராமரித்து வரும் மாடுகளின் எண்ணிக்கை விவரங்கள் தனியாக இணைக்கப்பட வேண்டும்) | |
| 11 | முன் வைப்பு தொகையை. வரைவு காசோலையாக (ரூ.1,98,000/-) The Commissioner Greater Chennai Corporationஎன்ற பெயரில் இணைக்கப்படவேண்டும் | வரைவு காசோலை விவரம்: |

**இடம்:** **சங்கதலைவர்/செயலாளர்**

**நாள்:** **சரிபார்க்கும் அலுவலர் கையொப்பம்**

<u>நடைமுறைப்படுத்துவதற்கான செயல்முறை (*Standard Operating Procedure*)</u>

**மண்டலம் -2 வார்டு 20 காமராஜர் சாலை பகுதியில் அமையவிருக்கும் மாட்டுக் கொட்டகையினை செயல்முறைகளை மேலே (*Standard* தெரிவிக்கப்பட்ட நடைமுறைப்படுத்துவதற்கான *Operating Procedure*) மாட்டின் உரிமையாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யவும், அங்கீகரிக்கப்பட்ட கால்நடை வளர்ப்போர் சங்கம் மூலம் பராமரித்து நிர்வகிக்கவும், மற்றும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான (*Standard Operating Procedure*):**

**பெருநகர சென்னை மாநகராட்சியின் பங்களிப்புகள்.**

1..மாடுகளின் உரிமையாளர் விவரங்கள், வைத்திருக்கும் மாடுகளின் எண்ணிக்கை. ஆகிய தரவுகளை பெறுதல்,

2. தொழுவங்களின் பயனாளிகள் மற்றும் நிர்வகிப்பாளர்களை தேர்வு செய்ய இணையதளம் வாயிலாக விளம்பரம் (*Online Publication*) செய்து, முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை வழங்கி இடங்கள் ஒதுக்கப்படும்.

3. வழுக்காத தரை தளம், மின்சார இணைப்பு, குடிநீர் இணைப்பு, கழிவுநீர் வடிகால் அமைப்பு உள்ளிட்டவற்றை ஏற்படுத்துல்.

4. கால்நடைகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக *Trevis* அமைத்து தருதல்,

5. அடிப்படை மருத்துவ சிகிச்சைகளை தினசரி அளிப்பதற்கு கால்நடை மருத்துவரை நியமித்தல்.

6. மாடுகளுக்கு தீவனம், வைக்கோல் வைப்பதற்கான அறை, கால்நடை மருந்துகள் வைப்பதற்கான அறை ஏற்படுத்துதல்.

7. கால்நடை மருத்துவர் அறை, மாட்டின் உரிமையாளர்கள், ஊழியர்களுக்கான அறை மற்றும் பாதுகாவலர்களுக்கான அறை (*Security Room*) ஏற்படுத்துதல்,

8. அடைக்கப்படும் மாடுகளுக்கு அடையாள வில்லை (*Ear Tag*) மற்றும் மைக்ரோசிப்பிங் (*Micro Chipping*) பொருத்துதல்,

9. சாணம் உள்ளிட்ட திடக்கழிவுகளை முறையாக தினமும் அகற்றப்படுவதை உறுதி செய்தல்

10. மாட்டு தொழுவத்தில் ஏற்படும் சிறிய பழுதுகளான மின்விளக்கு மாற்றுதல், மின்விசிறி மாற்றுதல், தண்ணீர் குழாய் மாற்றுதல், வெல்டிங் செய்தல் போன்ற இதர சில்லரை செலவினங்கள் சங்கம் மூலமே மேற்கொள்ளப்படவேண்டும்.

11. மாட்டு தொழுவத்தில் ஏற்படும் பெரிய பழுதுகளான மின் மோட்டார் மாற்றுதல், கூடுதல் அறைகள் கட்டுதல் மேற்கூறை அமைத்தல், கூடுதல் வசதிகள் செய்தல் போன்ற இதர பணிகள் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் மேற்கொள்ளப்படும்.

<u>**மாட்டின் உரிமையாளர்களின் பொறுப்புகள்:**</u>

1. நிர்ணயிக்கப்படும் வாடகை கட்டணத்தை தாமதமின்றி முறையாக செலுத்த வேண்டும்

2. அனுமதி அளிக்கப்பட்டுள்ள மாடுகளுக்கு அடையாள வில்லை *(Ear Tag)* மற்றும் மைக்ரோப்சிப்பிங் *(Micro Chipping)* பொருத்துவதற்கு அனுமதிக்க வேண்டும்

3. கொட்டகையிலிருக்கும் மாடுகளை எக்காரணம் கொண்டும் சாலைகளிலோ பொது இடங்களிலோ திரிய விடக்கூடாது.

4. மேற்கண்ட அடையாளபடுத்தப்பட்ட மாடுகள் சாலைகளிலோ பொது இடங்களிலோ திரியவிடப்பட்டால் அவை பெருநகர சென்னை மாநகராட்சியால் பிடிக்கப்பட்டு மாட்டுத் தொழுவங்களில் அடைக்கப்படும். அவ்வாறு அடைக்கப்படும் மாடுகள் எக்காரணம் கொண்டும் மீண்டும் மாட்டின் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கபடமாட்டாது.

5. ஒதுக்கீடு செய்யப்பட்ட மாடுகளுக்கு தேவையான தீவனங்கள், வைக்கோல், சிகிச்சைக்கான மருந்துகள் உள்ளிட்டவற்றை மாட்டின் உரிமையாளர்களே கொள்முதல் செய்து கொள்ள வேண்டும்.

6. நவீன மாட்டுக் கொட்டகையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சியால் நியமிக்கப்படும் கால்நடை மருத்துவரால் அடிப்படை சிகிச்சைகள் மட்டும் அளிக்கப்படும். மேம்பட்ட சிகிச்சை அறுவை சிகிச்சை மற்றும் உயர் சிகிச்சைக்கான ஏற்பாடுகளை மாட்டின் உரிமையாளர்களே மேற்கொள்ள வேண்டும்.

7. மாடுகளை மேற்சிகிச்சைகளுக்காக அழைத்து செல்லும் போது தங்களது சொந்த பொறுப்பில் அழைத்து செல்ல வேண்டும்.

8. கொட்டகையினுள்ளே மாடுகள் ஏதேனும் இறந்தால் அதனை மாட்டின் உரிமையாளர்களே முறையாக அப்புறப்படுத்த வேண்டும். மாடுகளுக்கோ அல்லது

9. மாடுகளால் ஏதேனும் விபத்து ஏற்பட்டு மற்ற பொதுமக்களுக்கோ காயம் அல்லது உயிரிழப்பு நேரிட்டால் உரிமையாளர்களே முழு பொறுப்பேற்க வேண்டும். மாட்டின்

10. கொட்டகையில் வளர்க்கப்படும் மாடுகளுக்கு மாட்டின் உரிமையாளர்களே முழு பொறுப்பேற்று கொண்டு தங்களது மாடுகளை பாதுகாத்து கொள்ள வேண்டும்.

11. பாதுகாவலர், தூய்மை பணி குடிநீர், மின்சாரம் மற்றும் இதர செலவிகளை சம்மந்தப்பட்ட சங்கத்தினரே ஏற்று கொள்ள வேண்டும்

**<u>அங்கீகரிக்கப்படும் கால்நடை வளர்ப்போர் சங்கங்களின் பொறுப்புகள்</u>**:

1. மாடுகளுக்கு நிர்ணயிக்கப்படும் வாடகை கட்டணத்தை முறையாக வசூலித்து மாதந்தோறும் பெருநகர சென்னை மாநகராட்சியில் செலுத்த வேண்டும்.

2 கட்டண அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படும் நவீன மாட்டுக்கொட்டகையில் அனுமதி அளிக்கப்பட்டுள்ள மாடுகளை மட்டுமே வைத்திருக்க வேண்டும்.

3. சாணம் உள்ளிட்ட திடக்கழிவுகளை முறையாக சேகரித்து குறிப்பிடப்படும் தனியார் நிறுவனம் மூலம் அப்புறப்படுத்த வேண்டும்.

4. தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தை தினமும் மூன்று வேளை தூய்மை செய்து, சுகாதாரமாக பராமரிக்க வேண்டும்,

5. பாதுகாவலர், தூய்மை பணி, குடிநீர், மின்சாரம் மற்றும் இதர செலவிகளை சம்மந்தப்பட்ட சங்கத்தினரே ஏற்று கொள்ள வேண்டும்

6. மின்சார கட்டணத்தை முறையாக செலுத்த வேண்டும்.

7. குடிநீர் வரி கட்டணத்தை முறையாக செலுத்த வேண்டும்.

8. தேவையான குடிநீர் வசதியை ஏற்படுத்தி கொள்ள வேண்டும்.